OS.No. :106/2022

நாள் :15.10.2024

வா.சா. : 1

பெயர் : சவுரிராஜன்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் தக்கல் செய்துள்ள ஆவணங்கள் வீட்டுவரி ரசீது மற்றும் மின்கட்டண ரசீதுகள் என்றால் சரி. அந்த ஆவணங்கள் எந்த சொத்திற்குரியது என்று அதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதில் door number உள்ளது. door number என்ன என்றால் 5/16. தாவா சொத்து பட்டாவில் சுப்புராயன் டிரஸ்ட்க்கு சொந்தமானது என்று உள்ளது என்றால் சரி. ஆனால் அதுபோல் எந்த டிரஸ்ட்டும் இல்லை. உயிலில் மட்டும் டிரஸ்டிற்கு சொந்தமானது என்று எழுதப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கான பட்டாவில் சுப்பராயன் டிரஸ்ட் என்றுதான் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீது மற்றும் மின்கட்டண ரசீதுகள் தாவா சொத்திற்குண்டானது இல்லை என்றாலும் என்னுடைய தனிப்பட்ட சொத்திற்குண்டானது என்றால் சரியல்ல.